(See Rule 42 of CRPC)

DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC. NO.267/2015

**Depostitions of PW-1 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முரளி | Caste | |
| Father's name | பெருமாள்ராஜா | Calling | மேற்பார்வையாளர் |
| Village | இராஜபாளையம் | Religion | |
| Taluk | இராஜபாளையம் | Age. | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of August-2024.

Signature of Witness.

09.08.2024

4 ம் எதிரி ஆஜர். 1, 2, 5 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஸ்ரீராம் மெடிடெக்ஸ் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.04.2013 ம் தேதி காலை 11.00 மணிக்கு மேற்படி நிறுவனத்தை திறந்து பார்த்தபோது பின்னால் உள்ள கண்ணாடி கதவு திறக்கப்பட்டு டெல் கம்யூட்டர் 3, ஆப்பிள் கம்யூட்டர்–2, UPS பேட்டரி 1, HP Printer1. கேனான் பேக்ஸ் மிசின்–1 ஆகியவை காணாமல் போயிருந்தது.

2. அன்றையதினம் மாலை 6, 7. மணியளவில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) 06.08.2014 ம் தேதி மாலை வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து காணாமல் போன பொருட்கள் கிடைத்துவிட்டதாகவும், வந்து அடையாளம் கட்டும்படி தகவல்

தெரிவித்தனர். காவல் நிலையம்சென்று பொருட்களை அடையாம் காண்பித்தேன். காணாமல் போன கம்யூட்டர், பிரிண்டர், பேக்ஸ் மிசின் ஆகியவற்றை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன்.

3. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள டெல் கம்யூட்டர் 3, ஆப்பிள் கம்யூட்டர்–2, UPS பேட்டரி 1, HP Printer–1. கேனான் பேக்ஸ் மிசின்–1 ஆகியவை எங்களது நிறுவனத்தில் இருந்து திருடுபோன பொருட்கள் ஆகும். (**வெள்ளைக்கலர் ஆப்பிள் மானிட்டர்–2 மற்றும் ஆப்பிள் கீபோர்டு–2 அ.சா.பொ.1 ஆகவும், கருப்பு கலர் டெல் மானிட்டர், CPU, UPS, Keyboard–3 அ.சா.பொ.2 ஆகவும், வெள்ளைக்கலர் கேனான் பேக்ஸ் மிசின்–1 அ.சா.பொ.3 ஆகவும், HP கிரே மற்றும் பிரிண்டர் அ.சா.பொ. 4 ஆகவும், இன்வேட்டர் அ.சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4. எங்களது நிறுவனத்தில் பேன்டேஜ் தயாரித்து வருகிறோம். எங்களது நிறுவனத்தினை சுற்றி காம்பௌண்ட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது நிறுவனத்தில் இரவு, பகலாக பாதுகாவலர்கள் பணியில் இருந்து வருகின்றனர் என்றால் சரிதான். எங்களது நிறுவனத்தின் நுழைவு வாயிலில் இருந்து 60 மீட்டர் தள்ளி மேலாளரின் அறையுள்ளது. மேலாளர் அறைக்கு செல்லவேண்டுமெனில் பார்வையாளர் அறையை கடந்துதான் செல்லவேண்டும் என்றால் சரிதான்.

5. மேலாளர் அறையில் 3 நபர்கள் பணிபுரிந்து வந்தனர். எங்களது நிறுவனத்தில் நான் உட்பட 9 நபர்கள் வேலைபார்த்து வந்தோம். எங்களது நிறுவனத்தில் மேலாளர் அறையில் உள்ள பொருட்களுக்கான பதிவேடு பராமரிக்கப்பட்டு வரும் என்றால் சரிதான். மேற்படி பதிவேட்டை பார்வையிட்டால் மேலாளர் அறையில் உள்ள பொருட்களில் விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் பார்ப்பதற்கு முன்பு மேலாளர் அறையில் இருந்த பொருட்கள் எப்போது காணாமல்போனது என்று எனக்கு தெரியாது என்றால்

சரிதான்.

6. புகாரில் காணாமல்போன பொருட்களின் நிறம் மற்றும் கம்யூட்டர் பொருட்களின் வகை மற்றும் அவை எங்கு வாங்கப்பட்டது என்பதற்கான விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேலாளர் அறையின் வெளிக்கதவு பூட்டப்பட்டிருந்தது என்றால் சரிதான். நிறுவன மேலாளர் அறையில் எந்த பொருட்களும் உடைந்து காணப்படவில்லை என்றால் சரிதான். மேலாளர் அறைக்கு செல்வதற்கு மெயின் கேட்டினை தவிர வேறு வழிஇல்லை என்றால் சரிதான்.

7. புகார்கொடுக்கப்பட்டு 1 வருடம் கழித்து பொருட்களை பார்த்தேன் என்றால் சரிதான். காணாமல் போன பொருட்களை நான் பயன்படுத்துவதில்லை என்றால் சரிதான். மேலாளர் அறையில் பணிபுரியும் நபர்கள் தான் காணாமல் போன பொருட்களை அடையாளம் காட்ட இயலும் என்றால் சரிதான். அ.சா.பொ.1 முதல் 5 வரையிலான பொருட்கள் எங்களது நிறுவனத்தில் காணாமல் போன பொருட்கள் என என்னால் அடையாளம் காட்ட இயலாது என்றால் சரியல்ல.

8. எங்களது நிறுவனத்தில் காணாமல்போன பொருட்களுக்கும், அ.சா.பொ.1 முதல் 5 வரையிலான பொருட்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொருட்களை அடையாளம் காண்பிப்பதற்காக இராஜபாளையம் வடக்கு காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை, ஆட்களை அடையாளம் காண்பிப்பதற்காக சென்றேன். இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் நான் எந்தப்பொருட்களையும் பார்க்கவில்லை. நேரடியாக நீதிமன்றத்தில் தான் அ.சா.பொ.1 முதல் 5 வரையிலான பொருட்களை பார்த்தேன். அ.சா.பொ.1 முதல் 5 ஆகியவை எங்களது நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது அல்ல என்ற விவரம் தெரியவரும் என்பதால் நிறுவனத்தின் பொருட்கள் அடங்கிய பதிவேடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ( **5 ம் எதிரி தரப்பில் 1, 2, 4 எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் (Adopt) கொள்ளப்பட்டது**.)